10ஆம் வகுப்பு | முதல் இடைப் பருவத் தேர்வு – 2019-20 | பதிவெண்

# தமிழ்

நேரம் : 1.30 மணி | மதிப்பெண் : 50

**I. உரியவிடையைத்தேர்ந்தெடுத்துஎழுதுக : (5 x 1 = 5)**

1. 'மெத்தவணிகலன' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந்+ தமிழ்+ நா ஆ) எந்த+ தமிழ்+ நா
இ) எம்+ தமிழ்+ நா ஈ) எந்தம்+ தமிழ்+ நா

3. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

4. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) கொண்டல் – 1. மேற்கு ஆ) கோடை – 2. தெற்கு
இ) வாடை – 3. கிழக்கு ஈ) தென்றல் – 4. வடக்கு
அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

5. பின்வருவனவற்றுள் முறையான தொடர்
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலை[illegible] இடமுண்டு

**கோடிட்ட இடத்தை நிரப்புக (5 x 1 = 5)**

6. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது ________ எனப்படும்.
7. உயிரளபெடை ________ வகைப்படும்.
8. முல்லைப் பாட்டு, ________ நூல்களுள் ஒன்று.
9. உலகக்காற்றுநாள் ________.
10. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ________.

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளி. (6x2=12)**

11. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
12. "மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
13. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.
14. 'நம்க்கு உயிர் காற்று காற்றுக்கு வரம் மரம் – மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.
15. வசன கவிதை – குறிப்பு வரைக.
16. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
17. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
18. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

**III. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஆறு வரிகளில்விடையளி. (2 x 4 = 8)**

19. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

(அல்லது)

'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'.
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

20. உயிராக நான், பலபெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் .... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றிப் பேசினால் ..... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

(அல்லது)

முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

**IV. கீழ்க்காணும் வினாவிற்கு பத்து வரிகளில் விடையளி : (1 x 6 = 6)**

21. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. (அல்லது)
முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)
அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**V. அடிபிறழாமல் எழுதுக. (4 + 2 = 6)**

22. அ. 'அன்னை மொழியே' எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடலை அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.
ஆ. 'எப்பொருள' எனத் தொ[illegible]கும் குறட்பாவை அடிமாறாமல் எழுதுக.

**VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளி : (8 x 1 = 8)**

23. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.
கல் ________, ஆடு ________ (குவியல்,குலை,மந்தை)
24. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரை இணைத்து எழுது.
ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
25. கோடிட்ட சொற்களுக்குப் பதிலாக அதேப் பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடரை மீள எழுதுக.
வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்தான்
26. எண்ணுப் பெயரைக் கண்டு தமிழ் எண்ணில் எழுதுக.
நாற்றிசையும் செல்லாத நாடில்லை
27. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
வான், மணி, மழை, மேகலை
28. பழமொழியை நிறைவு செய்க.
உப்பில்லாப் ________
29. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.
இருக்கும்போது உருவமில்லை __ இல்லாமல் உயிரினம் இல்லை. (காற்று, நறுமணம்)
30. ஆங்கில சொல்லுக்கு இணையான தமிழ் சொல் தருக.